www.tamilarangam.net



# 181

# 'மாண்டவர்' மீண்ட அதிசயம்!

ஏப்ரல் முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் புலிகளின் பத்திரிகையாளர் மாநாடு.

ஏப்ரல் முதலாம் திகதி முட்டாள்கள் தினம். அதனால் பத்திரிகையாளர்களுக்கு சந்தேகம் ஒருபுறம், பிரபாகரன் வருவாரா? என்று எதிர்பார்ப்பு மறுபுறம்.

**10.30 மணிக்கு மண்டபத்தில் பரபரப்பு. ஆயுதம் ஏந்திய பாதுகாவலர்களுடன் பிரபாகரன், பத்திரிகையாளர்களைப் பார்த்து சிரித்தபடியே வருகிறார்.**

இவர் பிரபாகரன்தானா? நாங்கள் காண்பது பிரபாகரனேதானா? பத்திரிகையாளர்கள் கண்களைக் கசக்கிக் கொண்டு பார்க்கிறார்கள்.

**இதே பத்திரிகையாளர்களுக்குத்தான் பிரபாகரன் இறந்துவிட்டதாகவும், அவரது உடல் வடமராட்சியில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்ததாகவும் வரதராஜப் பெருமாள் கூறியிருந்தார்.**

பிரபாகரனின் உடலின் நெற்றியில் அவரது துணைவியார் குங்குமம் இட்டார் என்றும்கூட பெருமாள் அண்டப்புளுகுகளை அவிழ்த்து விட்டிருந்தார் அல்லவா.

'இது ஏப்ரல் பூல் அல்லவே?' என்றும் சில பத்திரிகையாளர்கள் தங்களுக்குள் மெதுவாகப் பேசிக் கொண்டனர்.

இன்னொரு ஆச்சரியம் என்ன தெரியுமா? பிரபாகரனை வரவேற்று அழைத்து வந்தவர் மாத்தையா.

எந்த மாத்தையா குழுவினரால் பிரபாகரன் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று வரதராஜப்பெருமாள் கூறினாரோ அதே மாத்தையா.

புலிகளின் யாழ் மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் பானு, யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் டொமினிக் ஆகியோரும் பிரபாகரனை வரவேற்று அழைத்து வந்தனர்.



பத்திரிகையாளர் மாநாட்டுக்கு பிரபா வரும் காட்சி

## பிரபா பேச்சு

**காண்பதெல்லாம் கனவா, நனவா என்று பத்திரிகையாளர்கள் உறைந்து போயிருக்க, பிரபாகரன் அவர்களது சந்தேகத்தை போக்கும் விதமாக, "இன்று ஏப்ரல் முதலாம் திகதி என்பதால், உங்கள் முன்னால் இருப்பது பிரபாகரனா இல்லையா? என்ற சந்தேகம் உங்களுக்கு வரலாம்.**

**அப்படிச் சந்தேகம் இருந்தால் என்னைத் தொட்டுப் பார்த்துக் கொள்ளலாம்," என்று சிரித்தார். பத்திரிகையாளர்களும் இறுக்கம் தளர்ந்து சிரித்தனர்.**

"வதந்திகள் பயங்கரமானவை, எனக்கே நான் உயிரோடுதான் இருக்கிறேனா? என்று சந்தேகம் வந்துவிட்டது. என்னை நானே கிள்ளிப்பார்த்துக் கொண்டேன்.

என் மகள் துவாரகா இறந்துவிட்டதாக பரவிய வதந்தி எனக்கே சந்தேகத்தை ஏற்படுத்தியது.

என்னைப் பற்றிய வதந்திகளுக்கு முடிவு கட்டவே, இன்று உங்கள் முன் தோன்றியுள்ளேன். உண்மைகளை வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பு உங்களையே சேரும்" என்று கூறினார் பிரபாகரன்.

**அதன்பின்னர் அறிக்கை ஒன்றை வாசித்தார் பிரபாகரன். இலங்கை அரசுடன் நடத்திய தந்திரோபாயமான பேச்சுக்குப் பாதகம் இல்லாதவகையிலும், அதே சமயம் அரசுமீது அல்லாமல் புலிகள்மீதே தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ளத்தக்க வகையிலும் அறிக்கை தயார் செய்யப்பட்டிருந்தது.**

அந்த அறிக்கையின் முக்கிய பகுதிகள் பின்வருமாறு:

'விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டுமென சிங்கள இனவாதப் பத்திரிகைகள் குரல் எழுப்பி வருகின்றனர்.

**ஆயுதங்களை கையளிக்கவேண்டும் என்று குரல் எழுப்புதற்குப் பதிலாக, எதற்காக எமது இயக்கம் ஆயுதங்களை ஏந்தியது, எதற்காக நாம் பதினைந்து ஆண்டுகளுக்கு ஆயுதப் போராட்டத்தை நடத்தினோம், இதற்கான காரணிகள் என்ன என்பதை சிங்கள மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.**

ஆயுதப் போராட்டம் தோன்றி வளர்ந்த யதார்த்த நிலைகளை ஆராய்ந்து பார்த்து, அதன் காரணிகளை நீக்கிவிட உருப்படியான நடவடிக்கை எடுக்கப்பட்டால், ஆயுதப் பிரச்சனை தானாகத் தீர்ந்துவிடும்.

## இந்தியத் தலையீடு

**இந்திய இராணுவத் தலையீட்டை நாம் வெற்றிகரமாக முறியடித்துள்ளோம். இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் எமது தாயக மண்ணிலிருந்து முற்றாக வெளியேறிவிட்டது.**

**இந்திய வல்லாதிக்கத் தலையீட்டிற்கு முடிவு காணப்பட்டமை எமது விடுதலைப் போராட்டத்திற்கு கிட்டிய ஒரு மகத்தான வெற்றியாகும்.**

இந்தியாவின் இராணுவத் தலையீடும், அதன் விளைவாக ஏற்பட்ட பேரழிவுகளும் தமிழீழ மக்களுக்கு ஒரு நல்ல பாடத்தைப் புகட்டியிருக்கிறது.

**எந்த அந்நிய சக்தியிலும் தங்கியிராது, எமது உரிமைகளை நாமே போராடி வென்றெடுக்க வேண்டும் என்பதுதான் அந்தப்பாடம்.**

நாம் இந்திய அரசுக்கோ, இந்திய மக்களுக்கோ விரோதிகளல்ல, முந்திய இந்திய அரசின் தவறான கொள்கையையும், இராணுவத் தலையீட்டையுமே நாம் எதிர்த்தோம்.

**எமது பிரச்சனையில் இந்திய அரசு இராணுவரீதியாகவோ, அரசியல் ரீதியாகவோ தலையிடுவதை நாம் விரும்பவில்லை. எமது மக்களின் நியாயபூர்வமான போராட்டம், இந்தியாவின் அரசியல் பூகோள நலன்களுக்கோ, அல்லது உள்நாட்டு ஸ்திர நிலைக்கோ பங்கம் விளைவிக்காது என்பதை டில்லி ஆட்சிபீடம் உணர வேண்டும்.**

இந்தப் புரிந்துணர்வின் அடிப்படையில் புதிய இந்திய அரசு எமது இயக்கத்துடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

எமது மக்களின் நியாயபூர்வமான போராட்டத்திற்கு இந்திய அரசும், இந்திய மக்களும் ஆதரவையும், அங்கீகாரத்தையும் வழங்கவேண்டும் என்பதே எமது விருப்பம்.

## பேச்சுவார்த்தை

கிட்டத்தட்ட ஒரு வருட காலமாக சிறீலங்கா அரசுடன் நாம் சமாதானப் பேச்சுக்களை நடத்தி வருகிறோம்.

இந்தச் சமாதானப் பேச்சுக்களின் பயனாக இன்று தமிழீழத்தில் அமைதியும் சகஜ நிலையும் தோன்றியிருக்கிறது.

இந்த அமைதிநிலை நீடித்து எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமா, பாதுகாப்பாக வாழ வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

இது சிங்கள அரசியற் தலைவர்களதும், சிங்கள மக்களதும் பார்வையையும், அணுகுமுறையையும் பொறுத்திருக்கிறது.

வரலாற்றுரீதியாக எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட பாரிய அநீதிகளையும், தவறுகளையும் நன்குணர்ந்து மனித நீதி, மனித தர்மம் என்பவற்றின் அடிப்படையில் தீர்வு காண முயற்சிக்க வேண்டும்.

**எமது மக்களுக்கு நீதி வழங்க மறுத்து, மீண்டும் எம்மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுமானால், நாம் எமது மக்களின் சுதந்திரத்தையும், பாதுகாப்பையும் நிலைநாட்ட ஆயுதம் ஏந்திப் போராடுவதற்கு சிறிதேனும் தயங்கமாட்டோம்.**

எமது மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்வது எமது இயக்கம்தான். எமது இயக்கத்தை பலம் பொருந்திய தேசியசக்தியாக கட்டி எழுப்புவதற்கு தமிழ், முஸ்லிம் மக்கள் எமது இயக்கத்தின் பின்னால் அணிதிரள வேண்டும்"

பிரபாவின் அறிக்கையின் சில பகுதிகள் மட்டுமே மேலே இடம்பெற்றுள்ளன. அறிக்கையைத் தொடர்ந்து பத்திரிகையாளர்களது கேள்விகளுக்கு பதிலளித்தார்.

## புலிகளின் நிர்வாகம்

பிரபாகரனின் பத்திரிகையாளர் மாநாட்டை அடுத்து, மக்களிடையே இருந்த சந்தேகங்களும் முற்றாக விலகின.

வடக்கு-கிழக்கு புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்திருந்தது.

யாழ் குடாநாட்டில் கோயில் திருவிழாக்கள் போன்றவற்றிலும் புலிகள் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டனர்.



"வடக்கு கிழக்கு மாகாணம் இணைந்திருப்பதா இல்லையா? என்று கருத்துக் கணிப்பு நடத்துவது என்ற பேச்சுக்கே இடமில்லை. நாங்கள் அதை ஒத்துக்கொள்ளப் போவதும் இல்லை. எங்கள் தாயக மண்ணை நாங்கள் பிரித்துப் பார்த்து எப்பொழுதும் எண்ணுவதும் இல்லை!"

—ஏப்ரல் 1.1990இல் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பிரபாகரன்

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

இந்தியப் படை இருந்தபோதும், அதனுடன் சேர்ந்த இயக்கங்கள் இருந்தபோதும் மாலை ஆறுமணிக்குப் பின்னர் தெருவில் நடமாடவே மக்கள் அஞ்சினர்.

பெண்கள் வீடுகளுக்குள் அடைந்து கிடந்தனர். இரவில் வீட்டுக் கதவு தட்டப்பட்டால் பயத்தில் தவித்தனர்.

**இந்தியச் சிப்பாய்களின் கேலிகளும், காமப் பார்வைகளும் தெருவில் பகலில் நடமாடக்கூட கூச்சத்தை ஏற்படுத்தியது. போதாக்குறைக்கு இயக்கங்கள் என தம்மை அழைத்துக் கோள்வோர் பலரும் 'பெண் பொறுக்கிகள்' என்று அழைக்கப்படத்தக்க பார்வைகளுடனும், தோற்றங்களுடனுமே வீதிகளில் அலைந்தனர்.**

திருவிழாக்களுக்கு சென்றால் பெண்கள் நிம்மதியாக நடமாடமுடியாது. சேஷ்டைகளும், கேலிகளும், சமூகவிரோதிகளின் தொல்லைகளுமாக அவதிப்படவேண்டும்.

இந்திய இராணுவத்தினதும், அதன் கூட்டாளிகளாக செயற்பட்ட சமூகப் பொறுப்பற்ற இயக்கங்களதும் பிடியில் இருந்தபோதுதான் விடுதலைப் புலிகளின் அருமை பெருமைகளை வடக்கு-கிழக்கு மக்கள் உணர்ந்து கொண்டனர்.

அதிலும், புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் இருந்த யாழ் குடாநாட்டு மக்கள், புலிகளது சில கட்டுப்பாடுகள் தமது தனிப்பட்ட சுதந்திரத்தில் தலையிடுவதாக அதிருப்தியோடு இருந்தனர்.

**"இந்தியப்படைகளின் பிடியில் இருந்தபோது அந்த அதிருப்திகளும் மறைந்து, என்னதான் இருந்தாலும் அவர்கள் எங்கள் பிள்ளைகள். அவர்கள் இருந்தால் எங்கள் பெண் பிள்ளைகள் பயமே இல்லாமல் மானத்தோடு வாழ முடிந்தது." என்று பரவலாகவே பேச ஆரம்பித்தனர்.**

இந்தியப் படையோடு நட்பாக இருந்த இயக்கங்கள் என்றாலும், தமிழர் என்ற உணர்வோடு தங்களுக்கு உதவக் கூடும். அத்துமீறல்களை தடுக்க முயலக்கூடும் என்று எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

பாலியல் வல்லுறவுகள், மற்றும் அன்றாட அவஸ்தைகளை இயக்கங்கள் வேடிக்கை பார்த்தன.

'பெண்கள்தான் இதற்கெல்லாம் காரணம், மினுக்கிக் கொண்டு திரிந்தால் கையை போடுவாங்கள் தானே' என்று நாக்கூசாமல், **தங்கள் கோழைத்தனத்திற்கு பெண்கள்மீதே பழி போட்ட இயக்கப் பிரமுகர்களும் இருந்தனர்.**

## மேதினம்

புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் மறுபடி யாழ் குடாநாடு வந்ததும் பெரும்பாலான மக்களுக்கு மேற்கண்ட நரகத்தில் இருந்து மீட்சி கிடைத்தது.

மே 1, 1990ல் யாழ் நகரில் புலிகள் நடத்திய மேதினத்தில் மக்கள் தன்னிச்சையாக கூடினர்.

**யாழ் முற்றவெளி மைதானம் நிரம்பி வழிந்தது. கரவெட்டி, காங்கேசன்துறை, நெல்லியடி, கைதடி, தெல்லிப்பழை போன்ற பல பகுதிகளில் இருந்து பேரணிகள் புறப்பட்டு வந்து யாழ் முற்றவெளி மைதானத்தை அடைந்தன.**

இத் தொடரை எழுதும்போது வடக்கு-கிழக்கில் இம்முறை (1998)தமிழ்க் கட்சிகள் நடத்திய மேதினம் நினைவுக்கு வருகிறது.

இசை நிகழ்ச்சியுடன் நடத்தப்பட்ட புளொட் மேதினம் தவிர்ந்த ஏனைய கட்சிகளது மேதினத்தில் நூற்றுக்கணக்கானோரே சமூகமளித்தனர். யாழில் சில பகுதிகளில் நடைபெற்ற கூட்டங்களில் 50 பேர்கூட கலந்து கொள்ளவில்லை என்றால் நம்புவீர்களா? உண்மை அதுதான்.

முன்னர் ஒரு காலத்தில் குறுகிய முன்னறிவிப்புடன் சிறு கருத்தரங்கு நடத்தினால்கூட குறைந்தது ஐநூறுபேராவது திரள்வார்கள். தமிழ்க் கட்சிகள்மீது மக்கள் கொண்டுள்ள வெறுப்பையும், நம்பிக்கையீனங்களையும் இவ்வருட மேதின கூட்ட தோல்விகள் எடுத்துக்காட்டியுள்ளன.

புலிகளின் மேதின கூட்டத்தில் மாத்தையா, அன்ரன் பாலசிங்கம், யோகி உட்பட பலர் உரையாற்றினர்.

மட்டக்களப்பு நகரிலும் புலிகளின் மேதினக் கூட்டம் பெரியளவில் நடைபெற்றது. மகர தோரணங்களாலும், புலிக்கொடிகளாலும் மட்டக்களப்பு நகரம் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

நகரின் பல பகுதிகளில் இருந்து புறப்பட்ட பேரணிகள் மாலை 4 மணியளவில் கூட்டம் நடைபெற்ற இடத்தை சென்றடைந்தன.

காந்தி சிலையின் முன்பாக நடைபெற்ற மேதினத்தில் புலிகள் சார்பாக கருணா, கரிகாலன், தினேஷ் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

யாழ் முற்றவெளிக் கூட்டத்தில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் முக்கியமான கேள்வி ஒன்றை எழுப்பியிருந்தார்.

**"சிங்கள மக்கள் முப்படைகளையும் கொண்ட எழுபதினாயிரம் ஆயுதம் தாங்கிய ஓர் இராணுவ இயந்திரத்தை வைத்துள்ளார்கள். ஆகவே, தமிழ் மக்களுக்கு என்று ஒரு பாதுகாப்புப் படையை நாம் ஏன் வைத்திருக்கக் கூடாது? இதன் காரணமாகவே எக் கட்டத்திலும் நாம் ஆயுதங்களைக் கைவிடோம்" என்று கூறுகிறோம் என்றும்** பாலசிங்கம் தெரிவித்தார்.

## சோதியா மரணம்

விடுதலைப் புலிகளின் மகளிர் படையணிப் பொறுப்பாளர் மேஜர் சோதியா 11.01.90ல் மரணமானார்.

இவரது சொந்தப் பெயர் மரியா **மைக்கல் வசந்தி. கரவெட்டி மேற்கு நெல்லியடியைச் சேர்ந்தவர்.**

மன்னாரில் விக்டர் தலைமையில் நடைபெற்ற தாக்குதல், மாந்தையில் புலிகளின் முகாமை சுற்றிவளைத்த படையினருடனான மோதல், அடம்பன், நாவற்குளம் மோதல் ஆகியவற்றில் சோதியா தலைமையில் பெண்கள் அணி பங்கு பெற்றியது.

# பெண்கள் அணியின் தாக்குதல்

**இலங்கையின் போர் வரலாற்றில் பெண்கள் அணி சண்டையில் நேரடியாக ஈடுபட்ட ஆரம்பகால களங்களாக அவை அமைந்தன.**

தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து புறப்பட்ட படையினருடன் பெண் புலிகள் அணி கடுமையாகப் போரிட்டது. இம் மோதலில் பெண்கள் அணிக்கு சோதியாவே தலைமை தாங்கினார்.

1987ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் சோதியா தலைமையிலான பெண் போராளிகள் யாழ்ப்பாண குடாநாட்டிற்குள் இருந்த நாவற்குழி முகாம், யாழ்கோட்டை இராணுவ முகாம் ஆகியவற்றில் இருந்து இராணுவத்தினர் வெறியேறாமல் தடுப்பதில் ஈடுபட்டனர்.

1987 மார்ச் மாதம் நாவற்குழிப் பகுதியில் புலிகளுக்கும், படையினருக்கும் இடையே நான்கு மணிநேர மோதல் இடம்பெற்றது.

ஹெலிகொப்டர் ஒன்று மோட்டார் ஷெல்களை வீசியவண்ணம் நாவற்குழி முகாமுக்குள் தரையிறங்கமுற்பட்டது.

அப்பகுதியில் இருந்த புலிகளது காவல் அரண்கள்மீதும் தாக்குதல்கள் நடந்தன.

**அவ்வாறு இருந்தும் சோதியா தலைமையிலான பெண்கள் அணியின் தாக்குதலால் முகாமுக்குள் தரையிறங்கும் முயற்சியைக் கைவிட்டு ஹெலி திரும்பிச் சென்றது.**

அதே மார்ச் மாதம் 27ம் திகதி நாவற் குழி இராணுவ முகாமிலிருந்து மீண்டும் ஒரு பாரிய முன்னேற்ற முயற்சி நடந்தது.

சீ பிளேன் தாழப் பறந்து புலிகள் எங்கெங்கு நிலைகொண்டிருக்கிறார்கள் என்று உளவறிந்து பொம்பருக்கு தகவல் கொடுக்கும்.

பொம்பர் குறிப்பிட்ட பகுதிகளை நோக்கி குண்டுகளை வீசும். சீ பிளேனை 'கோள் மூட்டி' என்று புலிகள் அழைப்பார்கள். (தற்போது ஆளில்லாத உளவு விமானத்தை ஆட்காட்டி என்று அழைக்கிறன்றனர்)

சீ பிளேன் தகவல் கொடுத்தும்கூட பொம்பர் இலக்குத் தவறியே குண்டுகளைப் போட்டது. கைதடி வயோதிபர் இல்லமும், அநாதைச் சிறுவர் இல்லமும் பலத்த சேத முற்றன.

**சோதியா தலைமையிலான அணியினரின் தாக்குதலால் சீ பிளேன் சேதமடைந்தது, நாவற்குழி முகாமுக்கு அருகே உடனடியாக தரையிறங்கியது. மூன்று தினங்கள் திருத்த வேலைகள் நடைபெற்ற பின்னரே எடுத்துச் செல்லப் பட்டது.**

இம் மோதல்களில் சோதியா தலைமையிலான அணிக்கும், படையினருக்கும் இடையே 25-30 யார் இடைவெளி தூரம் தான் இருந்தது.

1987 ஜூன் மாதம் யாழ் தொலைத் தொடர்பு நிலையம்மீதான தாக்குதலிலும் சோதியாவும், பெண்கள் அணியும் பங்கு கொண்டன.

'ஒப்பரேசன் லிபரேசன்' இராணுவ நடவடிக்கை பதிலடியாக இத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

## இந்தியப் படையுடன்

யாழ்ப்பாண குடாநாட்டில் இந்தியப் படையினருடனான மோதலில் பெண்கள் அணி காட்டிய தீவிரம் இந்தியப் படையினரையே கிலி கொள்ள வைத்தது.



சோதியா

யாழ்ப்பாணத்தில் கல்லுண்டாய் வெளியில் 1987 ஒக்டோபர் மாதம் இந்தியப் படையினருக்கும், புலிகளுக்கும் இடையே ஒருநாள் முழுக்க கடும் சண்டை நடந்தது.

கவச வாகனங்கள், செயின் புள்க்குகள் சகிதம், மேஜர் சங்கர சர்மா தலைமையில் இந்தியப் படையினர் சண்டையில் ஈடுபட்டனர்.

**புலிகளின் ஆர்.பி.ஜி. தாக்குதலிலும், கண்ணிவெடியிலும் சிக்கி ஒரு கவசவாகனமும், ட்றக்கும் தடம்புரண்டு அராலிப் பாலத்திற்குள் விழுந்தன.**

இரண்டு இந்திய சிப்பாய்கள் இச் சண்டையில் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டனர். இச் சண்டையில் மகளிர் அணியும் சோதியா தலைமையில் பெரும் பங்கு வகித்தது.

சோதியா தலைமையில் புலிகளின் மகளிர் படையணி மட்டுமே பங்கு கொண்ட துணிச்சலான தாக்குதல்களில் சில வற்றை அடுத்த வாரம் பார்க்கலாம்.

(தொடர்ந்து வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்